181

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL-10. தொகுதி-10. | February. பிப்ரவரி 1915. | No-7. பகுதி-7.

ஒருவனைப்பற்றி ஓரகத்திரு.

இல்வாழ்வார் எவ்வகையானும் மற்றவருதவியின்றித் தமது வாழ்க்கையை யினிதாக நடத்துவது கூடாமையின், அவர் மற்றவருதவியை வேண்டி வாழ்தற் குரியவராக விருக்கின்றனர். முக்காலி நாற்காலி யென்பன வற்றின்கணுள்ள கால்களுள் ஒவ்வொன்றும் மற்றக் கால்களின் உதவியைப் பெறாத விடத்து, அது நிலை பெறுவதாமோ? மூன்று கால்களையுடையது முக்காலியாம்; நான்கு கால்களை யுடையது நாற்காலியாம். முக்காலியின் ஒவ்வொரு காலுக்கும் மற்றக் கால்களினுதவியும், நாற்காலியின் ஒவ்வொரு காலுக்கும் மற்றக் கால்களினுதவியும் அவசியமாக வேண்டு மென்பது அவற்றி னியல்பினை யூகித்து நோக்கினால் நன்கு விளங்குவதாம். இங்ஙனமே இல்வாழ்வாரும் வாழ்தற் குரியவராக விருக்கின்றனர். அண்டை வீட்டுக்காரர், எதிர் வீட்டுக்காரர் முதலாயினோரது உதவியைப் பெறுவதின்றி, எவ்வில் வாழ்வாராவது தமது வாழ்க்கையை யினிது நடத்துவதற்குரியராவரோ? ஆகாரென்பது நிச்சயமேயாம். ஆகவே, இல்வாழ்வார் பிறருதவியைப் பெறுவதின்றி வாழ்வது கூடாமையின், அவரெந்நாளும் தமக்குதவி செய்தற் குரியாரைத் தமக்குச் சார்பாகக் கொண்டே வாழ்தற் குரியவராக விருக்கின்றாரென்பது மறுக்கற்கியலாத விஷயமாம்.

முற்றுந் துறந்த முனிவரும் பிறருதவியின்றித் தமது துறவறவொழுக்கத்தைக் கடைபோகச் செய்வது முடியாதாயின்,

இல்லறத்தார் எவ்வாறு பிறருதவியின்றி, தமது இல்லற வாழ்க்கையை யினிது நடத்துவதற் குரியவராவர்? ஆதலால், இல்லறத்தார் தமக்குத் துன்பம் நேர்ந்த விடத்துக் குறிப்பறிந் துதவித் தம்மைப் பாதுகாத்தற் குரியாரைத் துணையாகப் பற்றி வாழ்வது அவர்க்கு அவசியமான கடமையாம். முதற் பொருளில்லாது வர்த்தகஞ் செய்கின்றவர்க்கு அவ்வியாபாரத்தால் தக்க லாப முண்டாவ தில்லையாமன்றோ? அங்ஙனமே தமக்குத் துன்பம் வந்தபோது, அதனைக் குறிப்பறிந்து நீக்கித் தம்மைக் காத்தற் குரியாரைத் துணையாகக்கொண்டு வாழாதவர்க்கு அவ்வாறு வாழ்வதால் இல்வாழ்க்கையில் நிலைபெற்றிருப்ப தில்லையாம். ஆதலால், இல்வாழ்வார் தம்மைத் தாங்க வல்லவரைத் துணையாகக் கொண்டு, அவர் சார்பில் வாழ்வதவசியமாம். நல்வினையின் பயனும் தீவினையின் பயனுமில்லை யென்பார், விடர், தூர்த்தர் முதலாயினோரைத் துணையாகக் கொண்டு அவர்களது சார்பில் வாழ விரும்புகின்றவன், எருமை வாலைப் பிடித்து, ஏரியிலிறங்குவது போலவாம். எருமை வாலைப் பிடித்து ஏரியிலிறங்கினவன் துன்புறுவதுபோலச் சமயத்தி லுதவிசெய்தற் குரியாராகாரைத் துணையாகக் கொண்டவர் துன்புறுவது நிச்சயமேயாம்.

சலதாரை நீரொன்று சமுத்திரத்தைச் சார்ந்தபோது, அது சலதாரை நீரென்னும் பெயரொழியப் பெற்றுச் சமுத்திர தீர்த்தமென்னும் பெயரைப் பெறுகின்றதன்றோ? அங்ஙனமே ஒருவர் அறிவொழுக்கங்க ளில்லாதவரா யிருப்பினும், அறிவொழுக்கங்களுடையாரைத் தமக்குத்துணையாகக்கொண் டொழுகுவாராயின், அவர் அற்பரென்னும் பெயர் நீங்கப் பெற்று அறிவுடையா ரென்னும் பெயரைப் பெறுவது நிச்சயமாம். மேலும் அவர் பாலொடு கலந்த நீர் பாலாக விளங்குவது போல அறிவொழுக்க முடையாராக விளங்குவர்; குற்றி (மரக்கட்டை)யைப் பற்றியிருக்கும் புல் உழவருழுபடையால் தீங்குறுவாறுபோலப் பிறரால் தீங்குறுவது மில்லையாம். ஈனரைத் துணையாகக் கொண்டு, அவர் சார்பி லிருப்பதொழிந்து, நல்லோரைத் துணையாகக் கொண்டு அவர் சார்பிலிருக்கும் இல்வாழ்வார் நன்மையை யடைவதன்றித் தீமையை யடைவது சொப்பனத்து மில்லையாம். காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம் (உலோபம்), மானம், உவகை, மதமென்னும் அறுவகைக் குற்றங்களால் வரும் துன்பத்தை நீக்க விரும்புகின்ற

வர் அவை யில்லாரைத் துணையாகக் கொண்டு, அவர் சார்பி லிருத்தல் வேண்டும். இச்சார்பில்லாதவர் இல்லற வாழ்க்கை யைக் கடைபோக நடைபெறச் செய்வது எவ்வாற்றானு மில்லை யாம்.

இல்வாழ்வார் தாம் தீயவற்றைச்செய்யும் போது, தாட்சண் ணியமில்லாது தமக்குக் கண்டித்துப் புத்தி சொல்லுவாரைத் துணையாகக்கொண்டு அவர் சார்போடு ஓரிடத்திலிருப்பாராயின், அவர்க்குப் பகைவர் செய்யுந் தீங்கு சிறிதுமில்லையாம். அறி வொழுக்கங்களால் மேம்பட்டு விளங்குகின்றவரைத் துணையாகக் கொண்டு, அவர் சார்போடு ஓரிடத்தில் வசிப்பவர்க்குப் பகை வருமிருப்பரோ? இாரன்றோ? பகைவரில்லாதவர்க்கு மக்கள் வாயிலாகத் தீமை யுண்டாவது எவ்வாறும்? ஒரு வாற்றானுமில்லை யாம். "இணக்கமறிந்திணங்கு" "சான்றோரினத்திரு" "பெரி யாரைத் துணைக்கொள்" என்று ஆத்திசூடியிலருளிச் செய்த ஔவைப்பிராட்டியார், அவற்றோடு நில்லாது, கொன்றை வேந் தனில் "ஒருவனைப்பற்றி யோரகத்திரு - நீ அறிவொழுக்கங்க ளால் மேம்பாடுடையா னொருவனைத் துணையாகக்கொண்டு, ஓரிடத்திருக்கக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளி யிருப் பதனை நன்கு ஊகித்து நோக்கினல், அறிவொழுக்கங்களால் மேம்பாடுடையாரைத் துணையாகக்கொண்டு, அவர் சார்பு பற்றி ஓரிடத்தில் வசிப்பவர்க்கு நன்மையென்று சொல்லப்படுவன வெல்லாம் நன்றாகவுண்டாகு மென்பது நன்கு விளங்கு மன்றோ? இல்வாழ்வார்க்கு அண்டை வீட்டுக்காரர், எதிர் வீட்டுக்காரர்முத லாயினோரைத் துணையாகக்கொண்டு அவர்கள் சார்பில் வாழ்வது அவசியமாயினும், அவர்க்கு அறிவொழுக்கங்களால் மேம்பட்ட வரது சார்பு மிகவும் அத்தியாவசியகமானதாம். அவரைத் துணை யாகக்கொண்டு, அவர் சார்பில் வசிப்பவர்க்கு யாவரது உதவியும் மிகு எளிதாகவுண்டாவதாம்.

மார்க்கண்டேய மகாமுனிவர் எமனைவென்று என்றும் பதி னறு வயதினராக விருக்க வரம் பெற்றதும், சுக்கிரீவன் வாலியின் பகையின்றி வாழ்ந்ததும், விபீஷணன் தன்பகைவன்மாள இலங் கைக்கிறைவனாயதும், பாண்டவர் தம் பகைவரை வென்று ஜய சீலாகவிளங்கியதும் எதனாலென்றுசீர்தூக்கிப் பார்ப்போமாயின், அஃது ஒருவனைப்பற்றி யோரகத்திருந்தமையே யாமெனப் பிற

ழாதுவிளங்கும். மார்க்கண்டேயமகாமுனிவர் பரமசிவனைத்துணையாகக் கொண்டு அவர் சார்பிலும், சுக்கிரீவனும் விபீஷணனும் ஸ்ரீராமரைத் துணையாகக்கொண்டு அவர் சார்பிலும், பாண்டவர் கண்ணபிரானைத் துணையாகக்கொண்டு அவர் சார்பிலுமிருந்தமையாற்றாற்றான் தமக்குநேரிட்ட துன்பமெல்லா மொழியப்பெற்றுச் சுகமாகவாழ்வாராயினர். நாமும் அறிவொழுக்கங்களால் மேம்பாடுடையாரைத் துணையாகக் கொள்ளுவதன்றிப் பிறரைத் துணையாகக்கொள்ளாது, அவர் சார்பிலிருந்து வருவோமாயின், எவர் பகையுமின்றி யினிதாக வாழ்தற்குரியவராவோம்; கடவுளருளைப் பெறுதற்கும் தகுதி யுடையவராவோம்.

“ சந்தன விருட்சத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனை தரும்
தங்கமக மேருவை யடுத்திநிங் காக்கையுஞ்
சாயல்பொன் மயமேதரும்,
பந்தமிகு பாலுடன் விளாவியத ணீரெலாம்
பால்போ னிறங்கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங்கொடுக்கும்,
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடி
னடுத்ததும் பசுமையாகும்
ஆனபெரி யோர்களொடு சகவாச மதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர்காண் ”.

என்று குமரேச சதகங் கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

Wise Sayings.

1. Many times must you sink and struggle in water before you learn swimming. So none can enjoy at once the felicity of swimming on the Ocean of Divine Bliss until he had made himself fit for it by wearisome struggles and trials.

2. If a man enters the world after acquiring Divine Knowledge, no stain of wealth or lust ever mars the purity of his Atma.

சுக நூல்.

12-ம் பாடம்.

சிசுக்களின் ஆகாரம் :—

சிசுக்களுக்குப் பல்லில்லை; அதனால் அவற்றின் இயற்கையான உணவு திரவமாகவே இருத்தல்வேண்டும். பால் தான் அத்திரவம். தாய்ப் பால் மிகவும் சிரேஷ்டமாம். அவசியமாக, வேறு பால் உபயோகிக்கும்படி நேரிட்டால் அது பற்றித் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளல் வேண்டும்; ஏனென்றால், பாலானது விரைவில் (விசேஷமாகக் கோடைக் காலத்தில்) புளித்துப்போகும் சுபாவமுடையது. புளித்துப்போன பால் குழந்தைகளின் குடலில் எரிச்சல் உண்டாக்கும். அதனாலே மாந்தமும் பச்சையான வயிற்றுப் போக்கும் உண்டாகும். தாய்ப் பால் கிடைக்காத குழந்தைகளை இக்கொடிய வியாதியினின்று தப்பச் செய்வதற்கு

1. வெகு நேரம் கொதிக்க வைத்த பாலையே உபயோகித்தல் வேண்டும். அதனால் பாலிலிருக்கக் கூடிய ஸகல விதமான நோய்க் கிருமிகளும் இறந்து போம்.

2. பாற் புட்டிகளை உள்ளே நன்றாகக் கழுவி எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

குழந்தைகளை அடிக்கடி நிறுத்துப் பார்த்தல் நன்று. அதனால் அவற்றின் தேக ஸ்திதி நன்றாக விளங்கும்.

சிசுக்களின் முதல் வருஷத்து மத்திம வளர்ச்சியைப் பின்வரும் ஜாப்தாவினால் காண்க:—

மாத வளர்ச்சி.

1-ம் மீ	2-ம் மீ	3-ம் மீ	4-ம் மீ	5-ம் மீ	6-ம் மீ	7-ம் மீ	8-ம் மீ	9-ம் மீ	10-ம் மீ	11-ம் மீ	12-ம் மீ
$56\frac{1}{4}$	$52\frac{1}{2}$	$48\frac{3}{4}$	45	$41\frac{1}{4}$	$37\frac{1}{2}$	$33\frac{3}{4}$	30	$26\frac{1}{4}$	$22\frac{1}{2}$	$18\frac{3}{4}$	15
தோலா.											
தினவளர்ச்சி.											
$1\frac{7}{8}$	$1\frac{3}{4}$	$1\frac{5}{8}$	$1\frac{1}{2}$	$1\frac{3}{8}$	$1\frac{1}{4}$	$1\frac{1}{8}$	1	$\frac{7}{8}$	$\frac{3}{4}$	$\frac{5}{8}$	$\frac{1}{2}$
தோலா.											

13-ம் பாடம்.

பானங்கள் :—

பால் :—

இது ஒரு பானம் மாத்திரமன்று; சிசுப் பிராயத்தின் தனி உணவு என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றோம். மேலும் அது மனிதனுடைய எந்தப்பிராயத்திற்கும் தகுதியானபானமும், சரியான உணவுமாம். அநேக வியாதிகளுக்கு (முக்கியமாக, தீனிக் குழல் சம்பந்தமான வற்றிற்கு) வைத்தியர்கள் வெறும் பாலையே ஆகாரமாக விதிக்கின்றார்கள்.

ஜலம் :—

நமது சரீரத்தினுடைய எடையில் முக்கால் பங்கு ஜலமாம். பிரதிதினமும் நாம் இரண்டு புட்டி ஜலம் இழக்கின்றோம். ஆகாரத்தைவிட ஜல பானம் அவசியமாம். ஆகாரமில்லாமல் ஒரு மாதமிருக்கலாம்; ஜலங் குடிக்காமல் 24-மணி நேரம் இருத்தல் முடியாது.

குடி நீர் :—

தாகத்தைத் தணிப்பதற்கு சுத்த ஜலமே சிலாக்கியமானது. ஆனால், எந்த நீரையும் உபயோகித்தல் கூடாது. நல்ல ஜலம் குளிர்ந்திருக்க வேண்டும். அஃதாவது பனிக்கட்டி அவ்வளவு சீதளமாக இருக்கவேண்டுமென்று அர்த்தமன்று. மிகவும் சீதளமான ஜல பானத்தால் சளி பிடிக்கும்; கபம் உண்டாகி ஸ்வாசக் குழல்களை அடைத்துவிடும். சரியானபடி மூச்சு விடல் முடியாது; தவிரவும், வயிற்றுப் போக்கும் சம்பவிக்கக் கூடும். வேர்வையால் நம்முடைய தேக ஜலம் குறைந்து போவதைப் பரிகரித்தல் வேண்டுமே யொழிய அதிக ஜலம் குடித்தல் கூடாது.

குடி நீர் பளிங்கைப்போல மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். கலங்கலான நீரில் களிமண், மணல், தூசி முதலிய சுகத்துக்குக் கெடுதியான வஸ்துக்கள் இருக்கும். நல்ல ஜலத்தில் சாதாரணக் காற்று கலந்திருத்தல் வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அந் நீரில் ருசி இராது. மேலும் காற்றில்லாத நீரை உபயோகித்தால் அஜீர்ணம் உண்டாகும்.

கொதித்த ஜலத்தில் காற்றில்லாதபடியினால் அதைக் குடி நீராக உபயோகிப்பதற்கு முன், அதை ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு வாயகன்ற பாத்திரத்தில் திரும்பத் திரும்ப ஊற்றுதல் வேண்டும். அதனாலே அந் நீரில் காற்று புகுந்து அதன் சூட்டைத் தணிக்கும்.

குடி நீர் ஒருவித வாசனையுமில்லாமல் நல்ல ருசியோடிருக்க வேண்டும்; அது சமையல் வேலைகளுக்குத் தகுந்ததாகவும் இருக்க வேண்டும். கீரை, பருப்பு முதலிய போஜன பதார்த்தங்கள் நல்ல ஜலத்திலேதான் நன்றாக வேகும். நல்ல ஜலத்திலே தான் சவுக்காரம் நன்றாகக் கரையும்.

ஜலத்தில், விஷபேதி, அஸ்திஜ்வரம் முதலிய அநேக கொடுமையான வியாதிகளின் ஸூக்ஷ்மமான கிருமிகள் இருப்பதுண்டு. அவ் வியாதிகள் குடி நீராலேயே பரவுகின்றன. சுத்தமான குடி நீரை உபயோகிக்கும் இடங்களிலே மேற் சொன்ன வியாதிகள் தலைகாட்டுவதில்லை.

ஆகையால் குடிநீர் விஷயத்தில் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்வது, நம்முடைய சௌக்கிய விர்த்திக்கு மிகவும் நல்லது. ஊற்று நீரே உத்தமமான குடிநீர். கிராமங்களிலே கிணற்று நீர் சிலாக்கியமானது. பட்டணங்களில் அநேகமாய்க் கிணறுகளுக்கு அருகிலே குப்பைத் தொட்டிகள், கக்கூஸ் முதலியன இருப்பதால், கிணற்று நீர் ஊற்று நீரானபோதிலும், பிரயோஜனமில்லை.

குடிநீர் விஷயத்தில் சந்தேகமிருந்தால்,

1-வது அதைக் கொதிக்க வைத்தல் மிகவும் நன்று.

2-வது அதை வடிகட்டுதல் வேண்டும். இக்காரியத்திற்கென்றே,

சாஸ்திரோக்தமான அநேக வடி கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அக்கருவிகளை அடிக்கடி சுத்தப்படுத்தல் வேண்டும். வியாதிகளின் கிருமிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலேயே தம்முடைய ஆயுள் முழுதையும் கழித்த "பஸ்தேர்" என்னும் பிரான்ஸு தேசத்துச் சாஸ்திரி கண்டுபிடித்த வடி கருவியே மேன்மையானது.

14-ம் பாடம்.

பானங்கள்.

(தொடர்ச்சி).

காபி - தேயிலைக் கஷாயம் :—

இவை இரண்டும் நரம்புகளைத் தூண்டி அவற்றிற்கு ஒருவிதமான சுறுசுறுப்பை உண்டாக்கும் பானங்கள். இவற்றை மிதமிஞ்சி உபயோகித்தால், நரம்புகளின் முறுக்கு நாளுக்கு நாள் தளர்ந்துகொண்டே வந்து கடைசியாக அவை கெட்டுப்போகும். இப் பானங்கள் குழந்தைகளுக்குத் தகுதியல்ல. அவை தூக்கத்தைக் கலைத்துவிடும். இரவில் விழித்துக் கொண்டிருக்கும்படி நேரிட்டால் இலேசான தேப் பானம் உபயோகித்தல் நன்று.

சாராயம் முதலிய லாகிரிப் பானங்கள் :—

இவற்றால் கெடுதியே யொழிய கொஞ்சம் கூடச் சுகமில்லை. கடினமான வேலை செய்யும் தொழிலாளிகள் தங்களுடைய இளைப்பைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுக் குடிக்க ஆரம்பிக்கின்றார்கள். வாஸ்தவத்தில் இளைப்புத் தீராது. ஆனால் குடியர்கள் மயக்கத்தி லிருப்பதால் அவர்கள் இளைப்பை உணரமாட்டார்கள். ஆரம்பத்திலே ஒக்காளம் உண்டான போதிலும், எப்படியாவது மது பானத்தை அப்பியசித்து விடுகிறார்கள். இப்பழக்கத்தால் குடியனுக்கு மாத்திரம் கெடுதி யென்று நினைக்க வேண்டாம்; அக்கெடுதி அவன் சந்ததிகளையும் தொடரும்.

குடியனின் கதி :—மதுபானம் அப்பியஸித்த சில வருஷங்களுக்குப் பிறகு புத்தி மழுங்கும்; ஞாபக சக்தி குறையும். அடிக்கடி மறதி யேற்படும்; மிகவும் நுட்பமான வேலைகளைச் செய்து கொண்டிருந்த தொழிலாளியும், அவ் வேலைகளில் பயிற்சியில்லாதவனைப் போலாகி விடுகின்றான். புத்தியில்லை; கை நடுக்கம்; எங்ஙனம் நுட்பமான வேலைகளைச் செய்வது முடியும்? நடையில் தடுமாற்றம்; பேச்சில் தடுமாற்றம்; பலம் போய்விட்டது; பசியும் போய்விட்டது. எதைச் சாப்பிட்டாலும் குடியனுக்கு வயிற்று வலி உண்டாகின்றது. பிரதிதினமும் வாந்தி; தீனிப்பையும், கல்லீரலும் கெட்டுப்போயின.

பகல் முழுதும் இளைப்பைத் தரும்படியான வேலைகளைச் செய்துகொண்டிருந்த போதிலும் இரவில் தூக்கமில்லை. சிறிது தூங்கினாலும் பயங்கரமான சொப்பனங்கள். நித்திரைவிட்டெழும்போது தலைப் பளுவு; முழங்கால் பிடிப்பு; இடுப்புவலி; குடியன் எப்போதும் சண்டைக்காரன்; கோபி. கண்கள் சிவந்திருக்கும். அறிவில்லாத முகம். கிழத்தனம் சீக்கிரம் வந்துவிடுகின்றது.

குடியனுக்கு இருதயம் பெரிதாகி, அதன் மேல் கொழுப்புப் படிந்து, தாது சரியாக நடப்பதில்லை. சாராயம் மூளையைப் போய்த் தாக்குகின்றது. அதனாலே குடியன் அறிவை யிழந்துவிடுகிறான். நாம்புக ளெல்லாம் கெட்டுப்போகின்றன. காக்கை வலி, இசிவு, க்ஷயம் முதலிய ரோகங்கள் அவனைப் பீடிக்கின்றன. பயித்தியக்கார ஆஸ்பத்திரிகளில் அடைபட்டிருப்பவர்களுள் பெரும்பான்மையோர் அரைப் பங்குக் குடியர்கள். தற்கொலை செய்து கொள்வோர்களில் காற்பங்குக் குடியர்கள்.

குடியனுக்கு எந்த வியாதி வந்தாலும், அது முற்றி வேறு அநேக வியாதிகளுக்கு ஆதாரமாகுமே யொழிய, சீக்கிரத்தில் சொஸ்தமாவதில்லை. விஷபேதி, அஸ்தி ஜ்வரம், காசம் முதலிய வியாதிகளுக்குக், குடியர்களே முதற் பலிகள்.

இவைமாத்திரமன்று. குடியன் தன் பிள்ளைகளுக்கும், தன்னுடைய கொடிய வியாதிகளைக் கொடுக்கின்றான். குழந்தைப் பருவத்தில் இசிவும்,வாலப்பருவத்தில் அறிவில்லாமையும்,மற்றும் ரோகங்களும் உண்டாகின்றன.

ஆகையால் மனித ஜாதிக்கு லாகிரி பானங்ளே கொடியசத்துருக்களாகின்றன. எந்தத் தேசத்திலே குடி மிகுதியோ அந்தத் தேசம் கூடிய சீக்கிரத்தில் தாழ்ந்த ஸ்திதியை அடையுமென்பதற்கு ஐயமில்லை.

மேற் சொன்ன காரணங்களால் கிஞ்சிற்றும் சாராயத்தை உபயோகித்தல் கூடாது என்பது நன்றாக விளங்கிவிட்டது.

ப்ரொபஸர்—சுப்பிரமணிய ஐயர்.

புதுச்சேரி.

மாணவர்கடமை.

1. மாணவர் எப்போதும் மரியாதையாகப் பேசப்பழகுதல் வேண்டும்; எவரையும் அசட்டையாகப் பேசுவது கூடாது.

2. தெருவில் நடக்கும்போது கையை வீசிக்கொண்டு ஆடம்பரமாகப் போதல்கூடாது; அமைதியாகப் போதல் வேண்டும்; வழியில் வணங்குதற்குரியாரைக் கண்டால் வணங்காமற் போதல் கூடாது.

3. நோயாயிருக்கும் காலத்தல்லது மற்றக் காலத்து ஸ்நானம் செய்யாதிருப்பது கூடாது; ஸ்நானம் செய்வது முடியாதாயின், உடம்பாவது குளித்தல்வேண்டும். இவ்வழக்கத்தை ஒவ்வொரு நாளும் செய்துவருதல் வேண்டும்.

4. ஒவ்வொரு நாளும் உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதுபோல உடையையுஞ் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும். முன்னாள் கட்டிய வஸ்திரத்தைப் பின்னாளிலும் கட்டும் வழக்கத்தை வைத்துக்கொள்ளுவது கூடாது. "கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்னும் பழமொழியை மறவாதிருத்தல்வேண்டும்.

5. பிறர் நமக்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்புவது போலப் பிறர்க்கும் நன்மைசெய்ய நாம் விரும்பவேண்டும்.

6. எப்போதும் பிறர்க்கு மனவருத்த முண்டாகக்கூடிய காரியத்தைச் செய்வது கூடாது; பிறரை நோக்கிச் சிரித் திகழுவது எப்போதும் கூடாது.

7. பேசும்போது அமைதியாகவும் தெளிவான அர்த்த முடையதாகவும் பேசல்வேண்டும்; பிடிவாதமாகவும் மூரட்டுத் தனமாகவும் பேசுவது ஒருபோதும் கூடாது.

8. ஆணையிட்டுப் பேசுவோருடனும், துர்ப்பாஷைகளைப் பேசுவோருடனும் பழகுவது கூடாது.

9. சற்குண முள்ளவர்களோடு கூடிப்பழகுதல் முடியாதாயின், தனியாயிருக்கவேண்டுமே யன்றி, தீக்குண முடையவர்களுடன் கூடிப்பழகுதல் ஒருபோதுங் கூடாது.

10. செய்ய வேண்டுமென்று குறித்துள்ள காரியங்களைக் குறித்த காலத்தில் தவறாது செய்தல்வேண்டும்; அவசியமாகப் படிக்கவேண்டிய நூல்களை மறவாது திருப்பித் திருப்பிப் படித்து வருதல் வேண்டும்.

11. பிறர்க்கு எவ்வளவு உபகாரம் செய்யக்கூடுமோ அவ்வளவு உபகாரமும் செய்தல்வேண்டும்; ஈ எறும்பு முதலிய எந்தப் பிராணிக்கும் மறந்தும் கெடுதிசெய்வது கூடாது.

12. பகலில் தூங்கும் வழக்கத்தையும், குறித்த காலத்தில் செய்யவேண்டிய வேலையைச் செய்யாது சோம்பியிருத்தலையும் அடியோடொழித்தல் வேண்டும்; இரவில் 10—மணி முதல் காலை 5—மணி பரியந்தம் நித்திரை செய்யவேண்டும்.

13. செய்யும் காரியம் சிறிதாக விருப்பினும், அதனைத் திருத்தமாகச் செய்தல்வேண்டும். செய்யுங் காரியத்தைத் திருத்தமாகச் செய்துவந்தால் தரித்திரத்தால் வருந்துவது பெரும்பானும் சம்பவியாது.

14. "போது மென்றமனமே பொன் செய்யுமருந்து" என்று நினைந்து திருப்தியாக இருத்தல்வேண்டும்; கடன்வாங்காது வாழமுயலுதல் வேண்டும்; பிறர்பொருளைக் கண்டு பொறாமை யடைவது கூடாது; ஆனால் நாமும் பிறர்போலப் பொருளைச் சம்பாதிக்க வேண்டுமென்று ஊக்கமாக உழைத்தல் தகுதியாம்.

15. தந்தை, தாய், உபாத்தியாயர், அரசன் சொல்லிய வேலையைத் தவறாது உடனே செய்தல்வேண்டும்; அதனைப் பின்னர்ப் பார்த்துக்கொள்ளுவோமென்று நினைப்பது கூடாது.

16. ஒவ்வொருவரும் "இவன் அரிச்சந்திரன்" என்று சொல்லும்படி பொய் பேசாதிருத்தல் வேண்டும்." "பொய் சொல்லும் வாய்க்குப் போஜனம் கிட்டாது" என்பதை மறத்தல் கூடாது.

17. தந்தையையும், தாயையும், தமையனையும், உபாத்தியாயரையும், அரசனையும் தெய்வம்போலப் பாவித்து நடத்தல்வேண்டும்; இவர்களைப் பழிப்பது ஒருபோதும் கூடாது. உறவினர், நட்பினர் முதலியோரிடத்துப் பிரியமாக வொழுகுதல் வேண்டும்.

18. "தாமடங்குதல், பிறரை நேசித்தல் என்பன வுடையவராக வொழுகுதல் வேண்டும்; நாம் யாவரிடத்தும் அன்புடையவராயிருந்தால், நம்மிடத்தில் யாவரும் அன்புடையவராயிருப்பார்.

19. எல்லா நன்மையுமுண்டாக வேண்டுமென்று கடவுளைக் கனவிலும் மறவாதிருத்தல் வேண்டும்.

ஆரோக்கியமாயிருக்கும் வழி.

1. ஆரோக்கியத்தை விரும்புகின்றவர் கண்ணுக்குக் கடுக்காயிலைழத்துப் போட்டுவரல் வேண்டும். உப்பால் பல்லை விளக்கிவரல் வேண்டும். உண்டு எழுந்திருக்கும்போது சிறிதுபசியாகவேயிருக்கவேண்டுமென்று ஒரு மருத்துவர் கூறுகின்றார்.

2. மற்றொரு மருத்துவர் "பசித்தபோது இதமாய உணவை மிதமாக வுண்ணல் வேண்டும்; உண்டபின் சிறிது தூரம் நடக்க வேண்டும்; படுக்கும்போது இடக்கரத்தைக் கீழே வைத்துப் படுக்கவேண்டும்; மலமூத்திரத்தை யடக்காது அவ்வப்போது கழிக்கவேண்டு மென்று கூறுகின்றார்.

3. பிராதக்காலத்திலும், அஸ்தமனமாகுங் காலத்திலும் குளிர்ச்சியான ஜலத்தில் பிரதிதினமும் ஸ்நாநஞ் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதால், சித்தசாந்தியும் ஏகாக்ரசித்தமுமுண்டாம்.

---

3. What is the use of loudly crying "God", "God". Regularly practise devotion and verily you shall see God.

4. The truest worship is the yearning of the soul to liberate itself from the domination of personal appetites and personal ambitions, and to enter into the blessed freedom of harmony and unity with that universal and absolute righteousness and love whose presence and whose authority its own higher nature reveals.

5. If a man is unhappy, this must be his own fault; for God made all men to be happy.

6. We may have many pleasures in life, but must not let them have rule over us or they will soon hand us over to sorrow.

துருவ சரித்திரம்

(முன் தொடர்ச்சி).

அத்யாயம் - 5.

இனி, இளைஞனும், தீரனும்; புண்யவானுமாகிய துருவனைப் பற்றிக் கவனிப்போம். ஜிதேந்திரியராய முனிவர்கள் உபதேசித்தபடி மகா புண்ய தீர்த்தமும் ஸர்வ பாபங்களையும் போக்குவதுமாகிய யமுனையின் பாங்கர் மனோகரமாக விளங்கும் மதுவனத்தின்கண் துருவன் தவச் சாலை ஏற்படுத்திக் கொண்டு தேவர்களுக் கெல்லாந் தேவனாகிய பரந்தாமனைக் குறித்துத் தவம் புரிவானாயினன். அவன் தன் உடற்காப்பின் பொருட்டு முதல் மாதத்தில் மூன்று நாளைக்கொரு முறை தவத்தினின்றும் நீங்கி அவ்வனத்திற் கிடைக்கும் கனிவர்க்கங்களைப் புசித்து வந்தான்; அடுத்த மாதத்தில் ஆறுநாளைக்கு ஒரு முறை வனத்திலுள்ள விருட்சங்களி னின்றும் உதிர்ந்து உலர்ந்திருக்கும் சருகுகளைப் புசித்துச் செயற்கரிய தவத்தை வழுவாது செய்து வந்தான்; அப்பால் மூன்றாவது மாதத்தில் ஒன்பது நாளைக்கு ஒரு முறையாக எழுந்து, (பருகியோர் பாவத்தைப் பாவனஞ் செய்யும்) புண்ய நதியின் நீரருந்தி உடற் சோர்வுறாது மனத்தை வேறொன்றிலும் செலுத்தாமல் கடுந்தவம் புரிந்து வந்தான்; பின்னர் அதற்கு அடுத்த மாத முதற்கொண்டு பன்னிரண்டு நாட்களுக் கொரு முறை தவத்திலிருந்து கொண்டே வாயுவை மாத்திரம் ஆகாரமாகக்கொண்டு தவம்புரிந்து வந்தான்; இவ்வாறு நான்கு மாதம் கழியவே ஐந்தாவது மாத முதலாக ஒன்றையுமே உட்கொள்ளாது தன்னுடைய சித்தத்தைச் சிதறவிடாது ஒரே நிலையில் நிறுத்தித் தவம்புரிந்து வந்தான்.

இங்ஙனம் அரிய தவம் புரிந்து வரும் துருவனுடைய தவத்திற் கிரங்கி, ஆபத் பாந்தவனும், அநாத ரட்சகனும், அன்பர்க் கெளியவனும், ஆதியஞ் சோதியுமாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தி இச்சிறுவனுடைய திவ்ய ஹிருதய கமலத்தில் ஜோதி வடிவமாக ப்ரகாசித்தார். தம்முடைய வயிற்றில் சகல லோகங்களையும் தரித்துக்கொண் டிருப்பவராகிய பகவான் துருவனுடைய இதயாம்பரத்தில் ஜோதி சொரூபமாகப் பிரவேசித்தலும், பூமி தேவி தவமதிச் செல்வனாகிய அச்சிறுவனைத் தாங்குவதற்கு ஆற்றாதவளாய் வருந்தினாள். துருவன் ஒருகால் தன் இடது காலை மாத்திரம் கீழே ஊன்றி நின்று கலங்காத சித்தத்தொடு

தவம் புரிவானாயினன். அப்பொழுது பூமி இடதுபுறம் தாழ்ந்தது. பின்னர், ஒரு சமயம் அவன் தன் வலது காலையூன்றி நின்று தவம்புரிவா னாயினன். அப்பொழுது பூமி வலப்பக்கம் தாழ்ந்தது. இங்ஙனம் பூமியானது பெரிய கஜத்தைத் தாங்கிச் செல்லும் ஓடம்போலத் தத்தளித்தது. இவ்வாறு பூமி நிலைகுலைந்து நிற்றலும், அருந் தவத்தினனாகிய அரசிளங் குமாரன் ஒரு சமயம் தன்னுடைய ஒரு பாதத்தின் பெருவிரலை நிலத்தில் ஊன்றிக்கொண்டு வாயுவைக் கும்பகஞ் செய்தவாறு சிறிதும் சிதறாத மனத்தினனாய்த் தியானஞ் செய்வானாயினன். இங்ஙனம் துருவன் செய்யும் அகோர தவத்தினால் பூமியும் பர்வதங்களும் நிலைகுலைந்து நடுங்கின; கடல்களும் நதிகளும் கொந்தளித்தன. துருவன் செய்யும் தவத்தி லெழுந்த தபாக்கியானது உலக மெல்லாவற்றையும் தகிக்கா நின்றது. இதனால் மிகுதியும் பயமடைந்த தேவர்கள் தங்கட் கிறைவனாகிய தேவேந்திரனிடம் சென்று முறையிட்டனர். இந்திரன் தேவர்களெல்லோருடனுமிருந்து தீர்க்கமாக ஆலோசனை செய்து இந்தத் துருவனுடைய தவத்திற்கு எவ்வாறேனும் இடையூறு செய்தல் வேண்டுமென்று கருதி அவன் தவத்தையழிக்கப் பயங்கரமான பூதங்களை ஏவினான்.

பூதங்கள் பல துருவனிருக்கும் தவச் சூழலை யடைந்து பற்பல மாயைகள் செய்யத் தொடங்கின. இவற்றுள் ஒன்று அந்தச் சிறுவனுடைய அன்னை ஸுநீதியைப் போல உருவு கொண்டு அவன் முன் தோன்றி, மிகுதியும் இரக்கம் பாராட்டுந் தன்மையாக நின்று "குழந்தாய்! துருவா! என் அப்பா! என் கண்மணீ" என்று அன்போடு அழைத்து "நீ செய்யுந் தவத்தை நிறுத்து; போதும்; உடம்பு கெட்டுப் போகும், என் ஐயா! அடே! வேண்டாம், கேள் - தவங்கிடந்து பெற்றேனே உன்னை! எவ்வளவோ அருமை பெருமையாகப் போற்றி வளர்த்தேனே! என் தங்கமே! என்ன பிடிவாத முனக்கு! நான் உன் தாயல்லவா! தாயின் வார்த்தையைத் தட்டலாமா? உன்னுடைய சிற்றன்னை சொன்ன வீண்வார்த்தைக்காக நீ இப்படி உன் தேகத்தை வருத்திக்கொள்வதேன்? என் கண்மணீ! கேள் - என் வார்த்தையை; எழுந்திரு தவத்திலிருந்து. பெற்ற நின் அன்னையைத் தனியே தவிக்கும்படி விட்டு இக்கானகத்திற்கு வந்து பயனில்

லாத இப்படிப்பட்ட ப்ரயாசத்தில் உன் குழந்தை உடலை வாட்டுவது தருமமா? என் கண்கொண்டு நான் எப்படி நீ வருந்தப் பார்ப்பேன்? குழந்தாய்! இந்தச் சிறு வயது உனக்கு இப்படிப்பட்ட தவஞ் செய்வதற்கேற்ற காலமா? ஓடியும் ஆடியும் திரிந்தும் எனக்கு மகிழ்ச்சி யுண்டாக்கும்படியான பாலப் பருவமல்லவா இது? பாலப்பருவங் கடந்ததும் நீ கல்வி கேள்விகளிற் கவனஞ் செலுத்த வேண்டும். அதன் மூலமாக உலக இயல்பினையுணர்ந்தும் நல்ல மங்கையை மணந்தும் உலகவாழ்வில் சிலகாலங்கழிக்கவேண்டும். பிறகு உண்மைப் பொருளை நாடித் தவம்புரிதல் வேண்டும். இவ்வாறு தான் உன் முன்னோரும் பெரியோரும் செய்து வந்திருக்கின்றனர். ஒன்றுமேயறியாத நீ இச் சிறுவயதில் செய்தற்கரிய பெருந் தவத்தைச் செய்து உன் உடலை வருத்துவதெனின், எனக்கு எப்படி மனம் ஒப்பும்? கண்மணீ! என் பேச்சைத் தட்டாதே! நான் தாய் என்பதற்கு மரியாதை கொடுத்து எழுந்திருந்து வீட்டிற்கு வா"—என்று கூறிற்று. இவ்வார்த்தைகளை யெல்லாம் பொருட்படுத்தாது அவன் இஞ்சிற்றும் தவ நிலையினின்று மாறினனில்லை. பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்பதற்கிணங்க நீ என்பேச்சைக் கேட்கமாட்டேனென்கிறாய்? இதோ பார் உன் முன்னிலையில் என் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உயிரை விட்டுவிடுகிறேன்" என்று கூறிற்று. அப்பொழுதும், அவன் தவத்தினின்றும் நீங்கினனில்லை; அப்பூதத்தைக் காணாதவன் போலவே யிருந்தான். அவன் மனோதிடத்தைக் கண்டதும் அப்பூதம் "இவன் நமது மாயைக்கு மருளான், நமது முயற்சி வீண்தான்" என்று கருதி "இதோ பார் உன்னைக் குத்தவும் கொல்லவும் அநேகமான ராக்ஷஸர்கள் கூட்டங் கூட்டமாக வருகின்றனர்; தவச் சூழலை விட்டு விரைவாக ஓடிவா, வீட்டிற்குப் போய் விடுவோம், என் அப்பா வல்லவா" என்று பயமுறுத்திப் பார்த்தது. அதற்கும் அவன் அசையவில்லை. பிறகு அது மறைந்து போய்விட்டது.

உடனே அநேகமாயிரம் பூதங்கள் மாயையினால் அநேகமாயிரம் ராக்ஷஸ உருக்கொண்டுக் கையில் வாளும், கதையும், வேலுங் கொண்டு துருவன் முன் தோன்றி ஆயுதங்களை நீட்டிக் காட்டி "எழுந்திரு; இல்லாவிட்டால் உன்னைக் குத்துவோம்; வெட்டுவோம், குடலைப் பிடுங்குவோம்" என்று கூறி பெரிய ஆ

வாரஞ் செய்தன. அதற்கும் அவன் அஞ்சினானில்லை. தறிபோல் அசையாது நின்றிருந்தான். பிறகு அவை தீயைக் கக்கும் முகமுடையனவாய்த் தோன்றிப் பயமுறுத்தின; அதனாலும் அவனை அசைக்க முடியாதது கண்டு, நாய்களாகவும் நரிகளாகவும் மாறிச் சூழ்ந்து நின்று சப்தித்தன. அவற்றிற்கும் அவன் கலங்கினானில்லை. பின்னர் அவை குதிரை, யானை முதலியவற்றின் முகமுடைய அரக்கர்களாகத் தோன்றி "அதட்டியும், ஓடிவந்தும், உதட்டை அதக்கியும் அட்டகாசஞ் செய்தன. அவன் சித்தம் இவற்றினால் சிறிதும் பேதமடைய வில்லை. அப்போது துருவன் பாவனாதீத நிலையிலிருந்தமையின், அவனுக்குப் புறத்தே நடக்கும் வியவகாரங்களுள் ஒன்றும் தோன்றாமற் போயிற்று. துருவனியற்றும் தவச் சூழலினின்று உண்டான தபாக்கினியின் வேகத்திற் காற்றமாட்டாதவைகளாய்ப் பூதங்கள் தாம் மேற்கொண்ட காரியத்தைச் சாதிக்கமுடியாது மனமாழ்கிச் சென்றன.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்,கியாண்டு மிடும்பை யில" என்று ஆசிரியர் திருவள்ளுவர் போதித்திருப்பது வீணாகுமா? பரந்தாமன் பாதகமலங்களைப் பற்றாக நாடி நிற்கும் இச்சிறுவனை எப்படிப்பட்ட இடையூறுகள் தோன்றினும் அவனை என் செய்ய முடியும்? துருவன் உலகம் புகழத்தக்க மகோந்நத நிலைமையை யடையவேண்டியவனாக அவதரித்திருக்கும் போது அதற்கு இடையூறு செய்ய இந்தத் தேவர்களாலாகுமா? இவ்வாறு தேவர்கள் செய்த ப்ரயத்தனங்கள் யாவும் துருவன் முன் பயனற்றொழியவே, அவர்களுக்குப் பெரும்பயமுண்டாயிற்று. அவர்கள் இஃதென்னவிபரீதம்? இவனுடைய தவத்தினால் இன்னும் நமக்கு யாது நேருமோ என்றஞ்சினர். பிறகு தேவேந்திரன் முதலியவர்கள் ஒன்றுகூடி, இவன் தவத்தைத்தடுப்பதற்கு உபாயம் என்னவென்று யோசித்து யாவரும் திருமாலிடம் சென்று கூறினாலன்றி இதற்கு ஒரு வழி ஏற்படாதென்று நிச்சயித்து, வைகுண்ட லோகம் சென்று ஸகலலோக நாயகனாகிய அச்சுதனைச் சரணமடைந்து முறையிடுவாராயினர்.

அச்சுதா! அநந்தா! பக்தவத்ஸலா! பரம காருண்யா! பாவனாதீதப் பழம்பொருளே! உனக்கு நமஸ்காரம்! எங்களெல்லோரையும் காப்பாற்ற வேண்டும். சிறுவனாகிய துருவனுடைய தவமானது எங்களையும் எங்களுடைய உலகங்களையும் தகிக்கின்

றது. நீர் கருணை செய்தாலன்றி நாங்கள் உய்வதற்கு மார்க்கமில்லை. மாதவரே! நீர் திருவுளமிரங்கல் வேண்டும். அவன் விரும்பித் தவம் புரிவது எதுவாயிருந்தாலும் அதனை யளித்து எங்களைக் காப்பாற்றவேண்டும். சரணமடைந்தோம்—என்று வேண்டிக்கொண்டனர்.

இவ்வாறு தேவர்கள் முறையிட, வைகுண்ட வாஸியாகிய மகாவிஷ்ணு அவர்களைக் கிருபையுடன் பார்த்து, நீங்கள் உங்கள் பதிக்குச் செல்லலாம், உங்களுடைய பதியைக் குறித்து இச்சிறுவன் தவம்புரிய வில்லை, அவன் விரும்புவது வேறு; அவன் உள்ளக் கருத்தை நான் அறிவேன்; அவனுக்கு நான் விரைவில் ப்ரத்தியக்ஷமாய் அவன் வேண்டும் வரத்தையளித்து அவனுடைய தவத்தை நிறுத்துகின்றேன்—என்று திருவாய் மலர்ந்தருளினர். தேவர்கள் "இனி நாம் பிழைத்தோம்" என்று மகிழ்ந்து தத்தம் பதிக்கேகினர். வரும்.

திரு-அ-சுப்ரமண்ய பாரதியார்.

சுவாமி விவேகாநந்தரின் கடிதம்.

அன்புள்ள அம்மா!

தங்களது தாய்போன்ற புத்திமதிகளுக்கு யான் இருதய பூர்வகமாக நன்றி பாராட்டுதலை அங்கீகரிக்க வேண்டும்.

எனக்கும், என்னால் செய்யப்பட்ட வேலைகளுக்கும் உதவியாக இதுகாறும் தாங்கள் செய்துள்ளவற்றிற்கும், இனியும் இவ்வருடம் செய்வதாகக் கூறும் உதவிகளுக்கும் தங்களுக்குச் செய் நன்றி எவ்வாறு கூறுவதென்பது எனக்குத் தோன்றவில்லை. ஆனால் இவ்வருடம் தங்கள் உதவியைப் பார்மர் என்னும் மாதிற்குச் செய்யவேண்டு மென்று யான் மனப் பூர்வகமாகக் கருதுகின்றேன். பல நூற்றாண்டுகளாகக் காத்திருந்தது போலவே உமது இந்துதேசம் இன்னும் சில காலம் காத்திருக்கலாம்; எந்த வேலை எந்தக்ஷணத்தில் செய்ய வேண்டுமோ அதனையே முக்கியமாய் முன்னர்க் கவனித்தல் வேண்டும்.

மேலும், மநு சொல்லியவாறு பார்க்குமிடத்தில், ஒரு நல்ல விஷயத்திற்குக் கூடச் சன்னியாசிகள் பணம் சேர்க்கக் கூடா

தென்று ஏற்படுகின்றது;பண்டைய காலத்துச் சாதுக்கள் கூறியவை மிகச் சரி என்று எனக்கும் தோன்றுகின்றது. "கிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு காத்திருத்தல் மிக்க துக்கவேது;கிடைக்காது என்னும் நம்பிக்கையோடிருத்தல் மிக்க சுகவேது"—எனக்கு இதைச்செய்யவேண்டும், அதைச் செய்யவேண்டுமென்ற அற்ப எண்ணங்கள் இருந்தன. ஆனால் இப்போது அவையாவும் வெறும்பொய்த் தோற்றமென்று காணப்படுகின்றன ; ஆதலால், அவ்வெண்ணங்களை விலக்கி வருகின்றேன்.

"எல்லா ஆசையையும் விட்டொழித்துச் சாந்தி பெற்றிரு; சிநேகரும் பகைவரும் இல்லாதிரு;தனிமையாக வசி; நமக்கு நட்புடையாரும், பகைவரும் இல்லாமலும், சுக துக்கம் இல்லாமலும், விருப்பு வெறுப்பு இல்லாமலும், ஒரு ஜீவனையும் வருத்தாமலும், அஃதாவது ஒரு ஜீவனுக்கும் துக்க காரணமாக ஆகாமலுமிரு; மலைக்கு மலை, கிராமத்திற்குக் கிராமம் சென்று கடவுளைப் பற்றி உபந்நியசித்துக் கொண்டு பிரயாணம் செய்யலாம்"

"உயர்ந்தோரிடமிருந்தும் தாழ்ந்தோரிடமிருந்தும் மேலேயிருந்தும் கீழேயிருந்தும் ஒருவித உதவியும் தேடாதே; ஒன்றும் விரும்பாதே; அழியும் இந்தத் தோற்றத்தை ஒரு சாட்சியைப் போல் பார்த்து அதனைக் கடந்துவிடு."

சில பைத்தியமான எண்ணங்கள் என்னை இந்த நாட்டிற்குக் கொண்டுவந்து விட்டன ; இதனால் யான் அடைந்த அனுபோகத்திற்காகக் கடவுளுக்கு வந்தனம் அளிக்கின்றேன்.

இப்போது யான் மிக்க சுகமுடையவனாக விருக்கின்றேன். யானும் எனது தோழரும் கொஞ்சம் அரிசி, அல்லது பார்லி யரிசி சமைத்து, அமைதியாக அதனை உண்டு, ஏதாவது எழுதுவது அல்லது படிப்பது, அல்லது ஏதாவது கற்க வரும் ஏழைகளிடம் பேசுவது ஆகிய காரியங்களைச் செய்து வருகின்றோம். இதனால் அமெரிக்கா தேசத்தில் முன்னர் இருந்த சந்நியாச நிலையைப் பார்க்கிலும் இப்போது மேலான சந்நியாசியாக இருக்கின்றேனென்பது எனக்குத் தோன்றுகிறது.

"ஐஸ்வரியத்தில் ஏழைமையின்பமும், அறிவில் அறியாமையின்பமும், அழகில் வயது முதிர்ந்து அழகு நீங்குமென்னும் பயமும், கீர்த்தியில் புறங்கூறுவோரதுபயமும், பிறர்வெற்றியில்மனம்

பொருது என்னும் பயமும், சரீரத்தில் இறத்தல் என்னும் பயமும் இருக்கின்றன. இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொன்றும்பயத்தால் நிரம்பி இருக்கின்றது. எவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டானோ அவன் ஒருவனே பயமற்று (நிர்ப்பயனாக) இருக்கின்றான்."

யான் (அவரை) ஒருநாள் பார்த்தேன்; சிலநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்தோம்; அங்குச்சிலர் இருந்தார்கள். அப்போது அந்த மாது தனது வீட்டில் ஆதிவாரந்தோறும் கற்க விருப்புடையோருக்கு உபயோகமாக ஓர் உபந்நியாசம் செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

இத்தகைய உபந்நியாசங்கள் செய்ய எனக்கு மனமில்லை' அவர்கள் வந்தால் அவர்களால் இறைவன் வாழ்த்தப்படுவார்.

விவேகாநந்தர்.

* * *

[இதில் இந்து மதக் கருத்துடையோர் யாவரும் பொதுவாய்க் கவனித்து அப்பியசிக்க வேண்டிய முக்கியமானவையும் சாதகமானவையுமான கருத்துகள் அடங்கி யிருக்கின்றன. மேலும், அவர் தாம் சந்நியாசியாக இருந்தும் தம்மைச் சரியான சன்னியாசி என்று ஒரு சந்தர்ப்பத்திலே, அஃதாவது தமக்குக் கிடைத்த பொருளைச் சமைத்து,உண்டு, எழுதி, அல்லது படித்து, அல்லது எழை ஜனங்களுக்கு எதாயினும் போதித்து, பொருளை நற்காரியத்தை முன்னிட்டும் தேட வேண்டாது இருந்தபோது, கருதிபதாகக் கூறுகின்றார். இச்சிறிய கடிதத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் சந்நியாச வேடம் பூண்டுள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது தமிழ் நாட்டில் சந்நியாசிகளில், 100-க்கு 99-அஃதாவது, தொண்ணூற்றென்பதே முக்காலே மூன்றுவீசம் அரைவீசம் பேர் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றும், மடம் முதலியன கட்டித் தம் பெயரால் அது நடைபெறவேண்டுமென்றும், தமது உருவச் சிலை முதலிய வற்றிற்குப் பூசை முதலியன நடைபெறவேண்டுமென்றும் கருதுகின்றார்கள். இத்தகைய இவர்களுக்கு, அறிவும் செல்வமும் நிறைந்த மேல்நாடு முழுமையும் இந்து மதத்தில் கொண்டிருந்த இழிந்த கருத்தை மாற்றி இதனைத் தாமும் கொள்ளவேண்டுமென்னும் கருத்து எழுமாறு செய்து வைத்த இந்த மஹா புருஷர் எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருந்தார் என்று காட்ட அவரது இச்சிறு கடிதம் மொழிபெயர்க்கப்பட்டது.]

வ. ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

ஊசியும், நூலும்.

ஒரு விநோதக் கதை.

கமலாபுரமென்னுமூரில் கமல நாத முதலியார் என்பவர் ஒருவரிருந்தார்; அவர் கல்வியில் தேர்ந்த கனவான். அவர் ஒரு நாள் காலை தமது மனைவியாகிய காமாட்சியை யழைத்து, பலகாரங் கொண்டுவா வென்று கூறினர். அவ்வம்மையார் ஊசிப்போன ஒரு மாவடையைக் கொண்டுவந்து, அவர்க்கு உண்ணக் கொடுத்தனர். அவ்வம்மையார்க்கு அவ்வடை ஊசிப்போயதென்று தெரியாது; கல்வி வாசனை அற்பமாகவேனு மில்லை. முதலியார் அவ்வடையை வாங்கி, மோந்துப் பார்த்து இவ்வடை யெனக்கு வேண்டாமென்று, கபடமற்ற தம் மனைவியாரிடத்துக் கொடுத்து விட்டனர். அதற் கவ் வம்மையார் ஏன் வேண்டாமென்று கொடுத்துவிட்டீர்; இது ஊசி யிருக்கின்றதோ என்றனர். அதற்கு அம் முதலியார் வேடிக்கையாக, அவ்வடையில் ஊசிமாத்திர மிருக்கவில்லை; நூலுமிருக்கின்றதென்று கூறினர். அவ்வம்மையார் அவர் கூறியதன் தாற்பரிய மறியாது. இதில் எங்கே நூலிருக்கின்றதென்று கேட்டனர். அவர் அவ்வடையை வாங்கிப் பிட்டு, அதில் நூல்போல் தொடர்ச்சியா யிருக்கிற பசைப் பொருளைக் காட்டி. இதோ நூலிருக்கின்றது பார் என்று பரிகாசஞ் செய்தனர். ஊசிப்போன பதார்த்தங்களில் நூல்போல ஒருவகைப் பொருளுண்டாகு மென்பது அவ் வம்மையார்க்குத் தெரியாது அதனால அது பரிகாசத்திற் கிடமாயிற்று. எதற்கும் பகுத்தறிவு வேண்டுமென்பது இக்கதையினல் நன்கு விளங்கும்.

நீதிநூல் விளக்கம்.

1-வது: தெய்வம் உண்டெனல்.

கோபுரமொன்றைப் பார்ப்போமானல், அதனை உண்டுபண்ணினவன் ஒருவனுளனென்பதுபோலவும், பொன் அல்லது இரத்னங்களினற் செய்த ஆபரண மொன்றைப் பார்ப்போமானல் அதனைச் செய்த தட்டான் ஒருவன் உண்டென்பது போலவும், நாம் தரித்துக் கொள்ளும் ஆடையை (வஸ்திரத்தை) க் கவனிப்போமாயின் அதனை நெய்தவ னொருவனுள னென்பது போலவும், இவ்வண்டபிண்ட சராசரங்க ளனைத்தையு முண்டுபண்ணினவ னொருவனுள னென்பது செவ்வையாக விளங்கும்.

குசேலோபாக்யான வசனம்.

அறிவினாலும் திருவினாலும் மேம்பாடுடைய துவாரபாலகர் குசேலர் கலங்கித் திகைத்து நிற்பதைக்கண்டு, மனமிரங்கி, அவரை யிகழ்ந்துகூறிய அறிவிலிகளை நோக்கி, நீவிர் இத் தவச்சிரேட்டரை யாரென்றுநினைத்தீர்? இவரையாம்பொய்பேசாதவரென்றும், தவத்தின் மிகுதியால் இளைத்தயாக்கையை யுடையவரா யிருக்கின்றாரென்றும், வேதங்களில் வல்லவரென்றும், இவ்விடத்தன்றி வேறெவ்விடத்திற்கும் போகின்றவ ரல்லரென்றும், இன்சொல்லுடையரென்றும் கொள்ளுதல் வேண்டும். எண்ணரிய பிறவிகளில் மானிடப்பிறப்பு மிகவரியதாம்; அப்பிறப்பிலும் இழி குலத்திற் பிறப்பதொழிந்து, சூத்திர வருணத்திற் பிறப்பதரியதாம்; அப்பிறப்பிலும் வைசிய வருணத்திற் பிறப்பதரியதாம்; அப்பிறப்பிலும் க்ஷத்திரிய வருணத்திற் பிறப்பதரியதாம்; அப்பிறப்பிலும் பிராஹ்மண வருணத்திற் பிறப்பதரியதாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவல்லவா? கண்ணபிரான், அந்தணரே அரசர்முதலிய மூவர்க்கும் ஆசிரியராவர்; தெய்வமுமாவர்; பிரமதேவர் முதலாயினோரினும் வல்லமை மிக்கவராவர்; நன்மை யுண்டாவதற்கும் தீமை யழிவதற்குங் காரணமாயிருப்பவர். எனக்கு அந்தணரே தெய்வமாவர் என்று கூறியிருக்கின்றாரன்றோ! அவ்வாறிருக்க, அவர்களின் மேன்மையைப்பற்றி யாம் ஐயமுறலாமோ?

அந்தணர்கட்குத் திவ்விய க்ஷேத்திரங்களில் வீடு கட்டிக் கொடுத்தவர்களும், உபநயன விவாகம் யாகம் முதலியவற்றைச்செய்தற்பொருட்டுத் திரவியங்கொடுத்தவர்களும், கறவைப்பசு, காணி முதலியவற்றைத் தானமாகக்கொடுத்தவர்களும், அறுசுவையுண்டியை அன்போ டளித்தவர்களும், வனமிருக முதலியவற்றாலும், கொடுங்கோன் மன்னராலும், நீராலும், நெருப்பாலும், கள்வராலும், மற்றவராலும் துன்பமுண்டாயகாலத்தில், அதுபற்றிமனமிரங்கி விரைந்துசென்று பொருளுதவுதல் முதலியவற்றால் உபகாரஞ்செய்து, இன்னும் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம்; நீவிர் பயமுறல் வேண்டாமென்று கூறுகின்றவர்களும் இம்மையில் பெருஞ்செல்வ முடையவராய் மனைவிமக்கள் முதலாயினாரோடு சுகமாய் வாழ்ந்து, மறுமையில் தேவராப்பிறந்து, நெடுங்காலம் சுவர்க்கபோகத்தை யனுபவிப்பார்கள்.

இத்தன்மையுடைய அந்தணர்களை யெளியவரென்றும்கருது வது அறிவீனமாகும். இவ்விடத்து நிற்கின்ற இப்பிராமணரை ஞானியென்று சொல்லுதல்வேண்டும். ஞானிகளுடைய இலக்கணங்களையும் அஞ்ஞானிகளுடைய இலக்கணங்களையும் யாம் கூறுகின்றோம்; நீவிர் கேட்பீராகவென்று கூறி, அவ்விலக்கணங்களைக் கூறுவாராயினர்.

பிறர் செய்தற்கரிய இயம நியம முதலிய செயல்களை மேற்கொண்டு, மனத்தை யொருமுகமாக்கி, மறைப்பொருளாகிய கண்ணபிரானிடத் திருத்தி, மனைவிமக்கள் முதலாயினோர் மீதும்,காணிமனை முதலியவற்றின் மீதுமுள்ள ஆசையையொழித்திருப்பவர்க்கு, மணி (இரத்தினம்) யாலும், பொன்னாலும், எந்த அரசராலும், உங்களாலும், எங்களாலும் ஆகும் பயன் யாதிருக்கின்றது? அதனை நீவிர் சொல்லுவீராக. அவர்கள் மேகங்கள் உலகம் நடுக்கும்படி பெருமழை பெய்தாலும், பெருங்காற்றுத் தோன்றி மலைகளைப் வேரோடு பிடுங்கி அவை தம்முள்மோதிக்கொள்ளுமாறு செய்தாலும், கடல் பெருகுவதால் உலகம் நிலைகுலைந்தாலும், தமது நிலையினின்றுங் கலங்குவதில்லையாவர்; அவர் மனம் சிறிதாகவேனும் நடுங்குவதில்லையாம். அவர் அவற்றைக் கண்டு நகைபாகிற்பர். அவர்கள் ஒருவர் தம்மைத் தோத்திரஞ் செய்து நறுமணமுள்ள கலவைச் சந்தனத்தைத் தம்மீது பூசினாலும்,மற்றொருவர் தம்மை அற்பரைப்போலப் பார்த்து அவமதித்துப் பல பேசினாலும், அவர்கள் மீது விருப்பாவது வெறுப்பாவது கொள்ளுவதில்லையாம்; பசியுண்டாயபோது கிடைத்த உணவை யமிர்தமாகக் கருதியுண்பர்; நாளைக்கு வேண்டுமென்று அவர் எதுபற்றியுஞ் சிந்தனைசெய்வதில்லர். ஆகாயத்திற்செல்லுதல், மீண்டும் பாதாளத்திற் பிரவேசித்தல், அப்பால் பூலோகத்திற்குவருதல், பாகாயப் பிரவேசஞ்செய்தல், தாமிருக்கும் இடத்தில் தாம் கருதிய பொருளெல்லாவற்றையும் வருமாறு செய்தல் முதலிய சித்திகளுள் ஒன்றையும் அவர் எஞ்ஞான்றும் விரும்புவதில்லை. புண்ணியம் பாவம், பெருமை சிறுமை, மெய் பொய் என்னுந் துவந்துவங்கள் (இருமைகள்) அவர்க்கெப்போது மில்லையாம். அவர் கூத்தாடுதல், பைத்தியம் பிடித்தவர்போற் றிரிதல், சிரித்துக்கொண்டே யிருத்தல், கைகொட்டிப் பாடிக்கொண்டிருத்தல் என்றற்றொடக்கத்தனவற்றுள் யாதாவதொன்றனையுடையவரா

யிருப்பர். அவர் இன்றைக்கிருந்த விடத்தில் நாளைக்கிருப்பாரென நிச்சயமாகச் சொல்வது முடியாது. அவர் ஒருவரோடும் சேர்வதில்லையாம்; தம்மைச்சுற்றிவந்து சேர்வாரோடும் சேர்வதில்லையாம்; கந்தைத்துணியையன்றி வேறுதுணியை உடுப்பதில்லையாம். இத்தன்மையுள்ள அவருடைய மகிமையை இவ்வளவென்று மதிப்பிடல் முடியுமோ? அதனை மதிப்பிட்டுச் சொல்லுவது எவர்க்குச் சாத்தியமாம்?

ஞானமாவது தலைமயிர் பறித்தல், மயிற்பிச்சம் தரித்தல், பாயுடை கொள்ளுதல் முதலியவற்றை யுடையவாது ஞானமும், மொட்டை யடித்துக்கொண்டு மஞ்சளுடை தரித்தல் முதலியவற்றையுடையவாது ஞானமும், அறிவொழுக்க மென்பவற்றுள் அணுத்துணையுமின்றி, யாம் போதி, யாஞ் சுத்த சைவர், யாம் ஸ்ரீவைஷ்ணவர், யாம் சாமியார் என்றற்றொடக்கத் தனவாகக்கூறி வேடதாரிகளாக விருப்பவருடைய ஞானமும் அல்லவாம்; ஆனால் தன்னை (ஆத்மாவை) யுள்ளவா றறிவதே ஞானமாம்.

ஞானிகள் போன்று நடிப்பவர்களோ தவமுதிர்ந்து சிவம் பழுத்த தத்துவ ஞானிகளைப்போலப் பேசுவார்கள்; ஞானிகள் போலத்தம்மை யலங்கரித்துக்கொள்ளுவர்; சற்கருமஞ் செய்கின்றவர் தம்மருகேவந்தால், விலகுங்கள், விலகுங்கள் எனக்கூறி அவர்களை விலகிப் போகச்செய்வர்; இவ்வாறிருப்பதே மெய்ஞ்ஞான நிலையாமென்று கூறுவர். இவர்கள் தாம் கெடுவதன்றி மற்றவரையும் கெடுப்பவராக விருக்கின்றனர். இவர்கள் பொன் மண் முதலிய பொருள்களிடத்து ஆசைபற்றவர்களைப்போலத்துறவறத்தை மேற்கொண்டு, அபக்குவர்களுக்குப் பணத்தின் பொருட்டு உபதேச முதலியவற்றைச்செய்து வருவதெல்லாம் ஆற்று வெள்ளத்தி லகப்பட்டுச் செல்லும் கரடியை ஆடென்றெண்ணி ஆற்றிலிறங்கி, அதனைப்பிடித்து, அதனோடு அவ்வாற்றில் மூழ்கியிறந்தவன்கதை போல்வனவாம். இன்னுமிவர்கள் பெருஞானியர்போன்றும், சரீராபிமானத்தை முற்றும் விட்டவர் போன்றும் நடித்து வருவதும்,(இவர்) வந்தனரே என்னும் உயர்திணை வினையை(இது) வந்ததே என அஃறிணை வினையாகவும், நீர் என்னும் முன்னிலைப் பெயரை இது எனப்படர்க்கைப் பெயராகவும் வழங்கி வருவதுமாகிய இவையனைத்தும் அறிவிலிகளை மயக்கி, அவர்களிடத்திருந்து பொருளைப் பறிப்பதற்கேயாம்.

மெய்ஞ்ஞானிகள் இல்லற வாழ்க்கையிலிருந்து, உண்டுடுத்தி மனைவி மக்களுடன் வாழ்ந்தாராயினும், பற்றற்றவராகவே யிருப்பர்; அவர்கள் துறவறத்தாரினும் சிறந்தவராவரென நூல்கள் கூறுகின்றன. அஞ்ஞானியர் இல்லறந் துறவற மென்னும் அறமிரண்டனுள் எதிலிருந்தாலும் சிறப்புறுவதிலர்.

இவ்வந்தணர் பூரண ஞானியாயிருந்தும், சற்கருமத்தை விடாது மேற்கொண்டிருக்கின்றனர். இவருடம்பு அச்சற்கருமத்தாலேயே இளைத்திருக்கின்றது. இது சத்தியமாம். ஞான சாஸ்திரங்களோ “திரிவித வுலகத் தரிதொரு ஞானி” என்று கூறுகின்றன; இம்மகாத்மா எங்களை யடிமை கொண்டாள இவ்விடத்திலெழுந்தருளினரென்று யாங்கள் கருதுகின்றோம்.

இவர் சாந்தீபினி முனிவரிடத்து வித்தியாப்பியாசஞ் செய்த காலத்து எனக்கும் கண்ணபிரானுக்கும் சிநேக முண்டென்று கூறியது உண்மையேயாம். அது காரணமாக இவர் நம்முடைய அரசாகிய கண்ணபிரானைக் காணவேண்டு மென்னும் விருப்பம் அதிகரித்தலால், அவரைக்காண இங்குத்தேடி வந்தனர். இவர் இவ்விரண்டுங் காரணமாக வந்தனரேயன்றிப் பொருள் காரணமாக வந்தவராகார். யாம் நல்வினையின் மிகுதிப் பாட்டால் இன்று இவரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றனம். இவரைப் பார்க்குந்தோறும் சந்தோஷமுண்டாகின்றது; உடம்பில் புளகமுண்டாகின்றது. கண்களில் ஆநந்தபஷ்பம் பெருகுகின்றது; துதிப்பதற்கு நாத்துடிக்கின்றது. ஆதலால் நாம் இப்போதே விரைந்து சென்று, கண்ணபிரானிடத்து இவர் வரவைத் தெரிவித்தல் வேண்டும் என்றுரைத்து, அறியாமையின் மிகுதிப்பாட்டால் குசேலரை யிகழ்ந்து கூறியவர்களது வாயையடக்கி, பின்னர்க் குசேலரது முகத்தைநோக்கிச் சில வசனங்கள் கூறுவாராயினர். (வரும்).

தத்வமஞ்சரி.

“திருப்பணுத்துறை” என்னுமூரில் வஸித்துக்கொண்டிருந்த ஒரு செம்படவன் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து காவேரி ஆற்றுக்குச்சென்று வலையை வீசி மீன் பிடித்து வந்தான். அவன் கூடை நிறைந்தவுடன் வலையைக் கரையோரத்திற்போட்டுவிட்டு வீட்டுக்குப்போவது வழக்கம். இவன்மீன்பிடிப்பதை ஆல

மரத்தின் மேல் உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு குரங்கு பார்த்துக் கீழேவந்து வலையைத் தூக்கி ஜலத்திலெறிந்தது. அதனால் அது தானே வலையிற் சிக்கிக்கொண்டு தண்ணீரில் அமிழ்ந்திறந்துபோயிற்று; இறக்குந் தருணத்தில் "ஐயோ! நான் என் காரியத்தைச் செய்யாமல் மனிதர்களைப்போலச்செய்யமுயன்று பிராணனையிழக்கின்றேன்." என்று கதறியது. இதுபோல் இந்துக்கள் ஐரோப்பியர்கள் மாதிரி உடுப்புக்கள் தரித்து தொப்பிபோட்டுக்கொண்டு நடப்பதால் தங்கள் பெருமையை யிழந்து பரிதவிக்கின்றார்கள்! என்ன புதுமை!

* * *

"ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்" என்று ஓர் அரிய வாக்கியமுண்டு. உலகவாஞ்சைகளைத் துறந்த பெரியோர்கள் உலகத்தாருடைய இகழ்ச்சியாலாவது புகழ்ச்சியாலாவது துன்பத்தையும் இன்பத்தையும் ஒருபோதும் அடைய மாட்டார்கள். ஒரு காளை மாட்டின் கொம்பில் சில நேரம் வரையும் உட்கார்ந்திருந்த ஓர் ஈ அக்காளைக்கெதிரில் வந்து "உன் கொம்பில் இத்தனை நாழிகை யுட்கார்ந்து கொண்டு உன்னைத் தொந்தரவு செய்தேன்; இனி போய் வரட்டுமா?" என்றது. அவ்வார்த்தைகளைக் கேட்ட காளை மாடு ஈயை நோக்கி "நீ உட்கார்ந்திருந்ததை நான் அறிய மாட்டேன்; நீ இருந்தாலும் போனாலும் உன்னால் எனக்கு யாதொரு ஸாதகமுமில்லை; பாதகமுமில்லை" என்றது. அதுபோல் ஞானிகள் உலகத்தார் தம்மைப் புகழ்ந்தாலும் அல்லது இகழ்ந்தாலும் கவனிக்க மாட்டார்கள்

* * *

ஒரு பாம்பின் தலையில் குளவியொன்று உட்கார்ந்து கொண்டு அடிக்கடி கொடுக்கால் கொட்டிக் கொண்டிருந்தது. பாம்பு உபத்திரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தையடைந்துகுளவியைச் சிக்ஷிக்க வகையற்றுக் கிலேச மடைந்தது. குளவியோ சற்றேனும் இரக்கமின்றிப் பாம்பைத்தலையில் கொட்டிக்கொட்டி இரத்தத்தை உறிஞ்சியது. அரவு தனக்கு மரணம் நேரும் தருணம் கிட்டுகிறதென்றுன்னி எதிரே வந்து கொண்டிருந்த ஒரு வண்டியின் சக்கரத்தில் தன்தலையைவைக்கச் சக்கரம் அதன்மேல் ஏறியது; அதனால் பாம்பும், குளவியும் அரைபட்டு மாய்ந்துபோயின; இவ்வாறே மூடர்கள் ஒருவரோடொருவர் சண்டைசெய்து நஷ்டமடைகின்றனர். மூங்கில்கள் ஒன்றோடொன் றுராய்ந்து எரிந்து போகின்றன.

சகோதரர்கள் ஒருவர்மேலொருவர் கோர்ட்டில் வியாஜ்யம்செய்து பொருள்களை யெல்லாம் வியர்த்த மாக்குகின்றனர். தான் கெட்டுப் போனாலும் அயலானும் தன்னைப்போலக் கெட்டுப் போகவேண்டு மென்பது துஷ்டர்களின் துணிபு. மகன்செத்தாலும் சாகட்டும்; மருமகள் கொட்டம் அடங்கினால்போதுமென்று தேங்காய் உடைத்து மாவிளக் கேற்றும் மாமிகள் எவ்வளவு பேரிருக்கின்றனர்!

T. K. இராமபத்ரசர்மா.

கோகுலரின் மரணம்.

பெருந் தேசாபிமானியான கோகுலரின் அகால மரணத்தைக் குறித்து இந்தியா முழுமையும் பெருந் துயரமடைகின்றது. நீண்ட காலமாகச் சுவாஸ காஸத்தால் வருந்திக்கொண்டிருந்த இவர் 13-ந் தேதி சனியன்று ஸ்ரீமான் காந்திக்குச் செய்த ஒரு விருந்துக்குச் சென்றபொழுது மிகவும் நோயுற்று வீடு சென்றார். பின் 17உ புதன்கிழமை அவர் நிலைமை அபாயகரமாகி விட்டது. கடைசியாக 19௳ வெள்ளிக்கிழமை இரவு $10\frac{1}{2}$ - மணிக்குக் காலஞ்சென்றார். வெள்ளிக்கிழமை மாலையில் அவருக்கே நாம் இறந்து போவோ மென்று தோன்றியதாம். அவர் இறப்பதற்கு 15-நிமிஷத்திற்கு முன்தான் சிநேகிதர் பலர் அவரைப் பார்த்துவிட்டுப் போயினர். அவர் இறந்த பின் அவரது முகத்தைக் கடைசியாகப் பலபெரியோர்கள் பார்க்கச் சென்றனர். (டாக்டர், ஸர். ராம கிருஷ்ண பண்டார்க்கர், ரனடேயின் மனைவியார் ராமாபாய் தேவியார், ஸ்ரீமான் பால கங்காதர திலகர், சிவராம கிருஷ்ண பரஞ்சபே, பெர்கூஸன் காலேஜிப் பண்டிதர்கள் முதலியோர் சென்றனர்). சனிக்கிழமை 10 - மணிக்கு தகனக்கிரியை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பகல் $1\frac{1}{2}$-மணிக்குத் தான் நடந்தது. 20000 ஜனங்களுக்கு மேல் வந்திருந்தனர் மயானத்திற்குப் போய்ச் சேர 2 - மணி நேரம் சென்றது. வீதிகளெங்கும் ஜனங்கள் கூட்டமாய் நின்றனர். ஸ்ரீமான் திலகர் முதலியோர் கோகுலரின் பெருவேலைகளைப் பற்றி வியந்து பிரசங்கஞ் செய்தனர். புனாவிலுள்ள கவர்ன் மெண்டு ஆபீசுகள், காலேஜிகள், கடைகள், வியாபார ஸ்தலங்க ளெல்லாம் மூடப்பட்டன. அநுதாபத் தந்திகள் வந்து குவிந்த வண்ணமா யிருந்தன.

கல்கத்தாவில் கூடிய ஒரு மீட்டிங்கில் சுரேந்திரநாத பானர்ஜி கோகுலரின் மரணத்தைக் குறித்துத் துக்கங்காட்டிப் பேசினர். அவர் கோகுலரை ராஜரிஷியென்று கூறினர். ரங்கூன், பம்பாய், அலகபாத், சென்னை முதலிய இடங்களிலும் ஜனங்கள் கூட்டங் கூடிப்பேசினர். பம்பாயிலும் கடைகள் மூடப்பட்டன; அலகபாத்தில் அநேக பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன.

யுத்தம்.

சில காலமாகத் தர்ம மார்க்கத்திலிருந்து வழுவிச் சென்றுகொண்டிருக்கும் உலகத்தாரை நல்வழிப்படுத்துமாறு தெய்வ ஸங்கற்பத்தால் ஏற்பட்டதென்று தோன்றும் இந்த யுத்தம் விரைவில் முடியுமென்று தோன்றவில்லை. அதர்ம உலகத்தார் மீது கடவுளுக்கேற்பட்ட கோபம் இன்னும் தணியவில்லைப்போலும்; ஆனால் ஸர்வ ஸக்தி வாய்ந்த அக்கடவுளின் கோபம் இன்னும் பெரிதாகப் பொங்கி உலகத்தார்க்கு இன்னும் பெருங் கேடுகளை விளைக்கும்போலிருப்பதைக் குறித்து நாம் பெரிதும் அஞ்சுகின்றோம்.

அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் இப்பொழுது ஓர் அநியாயமான போர் மூளும்போலிருக்கின்றது. ஜெர்மனியிலுள்ள அமெரிக்கர்களை ஜெர்மனியர் பகிரங்கமாக அவமதிக்கிறார்கள்; அநேகர் ஜெர்மனியை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள் என்று தந்திகள் கூறுவது வாஸ்தவமாயின் அஃது ஓர் ஆபத்தான விஷயமே. இத்தலியில் ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமான அபிப்பிராயங்கள் மிகுந்துவிட்டனவென்றும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி ரோமிலுள்ள ஆஸ்ட்ரியத் தூதர் ஆபீஸைத் தாக்க முயன்றனரென்றும் ஒரு தந்தி கூறுகின்றது. இதனால் ஆஸ்ட்ரியாவுக்கும் இத்தலிக்கும் யுத்தம் தொடங்குவதற்கு நீண்டநாட் செல்லாதென்று நாம் ஊகித்தல் வேண்டும்.

ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் சண்டை உக்கிரமாகவே நடந்து வருகின்றது. ஆனால் அந்தத் தீவிரமான சண்டையாரம்பிப்பதற்கு இன்னும் சில மாதங்கள் செல்லும். "மேமாதம் சண்டை தொடங்கும்" என்று லார்ட் கிச்சனர் கூறுவதன் கருத்து இதுவே போலும். பிரிட்டிஷ், ப்ரெஞ்சு ஆகாய விமானங்கள் நல்லவேலை செய்கின்றன. ப்ரிட்டிஷ் ஆகாயப்படைகள் ஆகாயத்திலும் நல்லவேலை செய்யக்கூடுமென்பதைக் காட்டிவிட்டன. "அலைகளை ஆள்கின்றது" என்று புகழப்படும் பிரிட்டன் இனி ஆகாயத்திலும் ஆட்சி செலுத்துவதில் வன்மையுடையதென்று கொண்டாடப்படும்.

ருஷியரோடு செய்யும் சண்டையில் ஜெர்மனியர் வெற்றி பெற்று வருகிறார்களென்று தெரிகின்றது. ஸெர்வியாவை ஆஸ்ட்ரியர் மீட்டுந் தாக்க ஆரம்பித்து விட்டனர். அல்பேனியாவில் குழப்ப மிகுதியா யிருக்கின்றதென்று தெரிகின்றது. அடக்கு முறைகளால் அடங்கிக் கிடக்கும் தீப்போன்ற குணங்கள் இப்பொழுது வெளிப் படுவதற்குரிய காலமா யிருக்கின்றது. அதற்கு இயற்கையும் உதவி செய்யும் பொழுது தீ வளர்ந்தோங்குவதில் ஐயமென்ன?

சூயஸ் கால்வாய்க்குத் துரிதமாய்வந்த துருக்கியர் தோல்வியுற்றோடிப் போயினர். எகிப்பைத் தாக்க விரும்பிய என்வர் பாட்சா தீர்க்காலோசனையுடன் புறப்பட வில்லைப்போலும். அவர்கள் சமீபகாலத்தில் இப்பக்கம் வரும் யோசனையுடன் இல்லையென்று தெரிகின்றது.

கடைசியாக ஒரு நல்ல சமாசாரமும் வருகின்றது. தாழ்ச்சியுற்ற அநேக நாடுகள் ஸ்வராஜ்யம் பெறு மென்று சிலர் கூறும் ஜோஸ்யங்களும் உண்மையாய்விடுகின்றன. போலண்டுக்கு ஸ்வராஜ்யம் கொடுத்து விடுவதாக ஆஸ்ட்ரியர் தீர்மானித்து விட்டனர் பூர்விகப் பெருமையுள்ள போலண்டு ராஜ்யத்தை ஒரு காலத்தில் ருஷியர், ஜெர்மனியர், ஆஸ்ட்ரியர் மூவரும்பங்கிட்டுக்கொண்டனர். ருஷியரிடத்துள்ள போலண்டின் ஒரு பகுதியாருக்கு ஸ்வராஜ்யம் கொடுத்து விடுகிறேனென்று ருஷிபச் சக்ரவர்த்தியார் யுத்த ஆரம்பத்திலேயே விளம்பரஞ் செய்தார். ஜெர்மனியரும் அவ்வாறே சொல்லியிருக்கின்றனர். ஆஸ்ட்ரியாவிலுள்ள ஒரு பகுதியான ஆஸ்ட்ரியப் போலண்டுக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பதாக இப்பொழுது ஆஸ்ட்ரியர் முன் வந்திருக்கின்றனர். ஆர்ச்ட்யூக் ஸ்டீபன் என்பவரை அரசராக்கி விரைவில் அவருக்கு க்ராக்கோவில் முடி சூட்டப் படுமென்றும் தெரிகின்றது. இனி, மிகப் பெருமையுடன் விளங்கி இடையில் வீழ்ச்சியடைந்து, இப்பொழுது கால மகிமையால் உயிர்பெற்று வரும் போல் ஜாதியர் விரைவில் தங்கள் பழைய முன்னிலையை அடைவார்களென்பதில் ஐயமில்லை.

---

1. I am always content with that which happens; for I think that what God chooses is better than what I choose.

2. Seek not that things should happen as you wish; but wish the things which happen to be as they are, and you will have a tranquil flow of life.

3. If you wish for anything which belongs to another you loose that which is your own.

4. To render ourselves insensible to pain, we must forfeit also the possibility of happiness.